இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 212 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 30 – சனிக்கிழமை 14 மார்ச் 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 212 : Thiruvalluvar Year - 2057 - Maasi 30 - Saturday 14 March 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2026) மதுரவாயல் தெற்கு பகுதி கழகத்தின் சார்பில், போரூர் நாற்சந்திப்புப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் முழு உருவ வெண்கலச் சிலைகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி, பிரபாகர ராஜா, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி, வட்டச் செயலாளர் சுந்தர் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2026) ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநராக பதவியேற்றுக் கொண்ட ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவர்களுக்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி நீதியரசர் சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, ஆளுநரின் துணைவியார் திருமதி அனகா அர்லேகர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஒன்றிய அரசின் முயற்சிகளுக்குத் துணை நிற்போம்!

# எரிபொருள் பிரச்சினை: பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் !

**சென்னை, மார்ச் 14–**

**“போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்பட வேண்டாம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூல் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா இடையேயான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கிடைக்கும் கச்சா எண்ணெய் தடைபட்டுள்ளதால் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை கொடுக்கவும், சமையல் எரிவாயு சிலிண்டர் உற்பத்தியை அதிகரிக்கவும் எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளது.

காஸ் தட்டுப்பாடு காரணமாக ஆட்டோ டிரைவர்கள், பங்குகள் முன்பு பல மணி நேரம் காத்திருந்தும், காஸ் கிடைக்காததால் ஆட்டோக்களை இயக்க முடியாமல் ஸ்தம்பித்து நிற்கின்றனர். எரிபொருள் பற்றாக்குறை அவர்களின் அன்றாட வருமானத்தை கடுமையாக பாதித்துள்ளது. இதனால் பெரும்பாலான ஆட்டோக்கள் சாலை ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

### உணவகங்கள் மூடல்!

இந்த நிலையில், வணிக பயன்பாட்டு சிலிண்டர்கள் கிடைக்காததால் சென்னை, பெங்களூரு, மும்பை என நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணவகங்கள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன.

### சிலிண்டர்கள் தட்டுப்பாடு!

வழக்கமாக வீடுகளுக்கான காஸ் சிலிண்டரை முன்பதிவு செய்தால் 2 நாட்களிலேயே வந்துவிடும். ஆனால் தற்போது ஒரு வாரமானாலும் சிலிண்டர் டெலிவரி செய்யப்படுவதில்லை என ஏராளமான மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சிலிண்டர் தட்டுப்பாடு எப்போது சரியாகும் என்பது தெரியாததால் ஏராளமான பேச்சுலர்களும், குடும்பத்தினரும் மின்சாரத்தில் இயங்க கூடிய இன்டக்ஷன் அடுப்புகள் பக்கம் மாற தொடங்கியுள்ளனர். இதற்கிடையே, வணிக பயன்பாட்டு சிலிண்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடு, ஓட்டல் தொழிலை ஒட்டுமொத்தமாக முடக்கியுள்ளது.

ஈரான், இஸ்ரேல், அமெரிக்க போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் தற்போதைய சூழலில் சிலிண்டர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காத சூழ்நிலையே நிலவுகிறது. இதனால் ஓட்டல் உரிமையாளர்கள் மீண்டும் விறகு அடுப்புகளைப் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதற்காக விறகு கடைகளை நோக்கி ஓட்டல் உரிமையாளர்கள் படையெடுக்க தொடங்கியுள்ளனர். இவ்வளவு நாள் காத்து வாங்கிக் கொண்டிருந்த விறகு கடைகளில் தற்போது புக்கிங் முறையில் விறகுகள் விற்பனையாகி வருகிறது. விறகு கடை வியாபாரிகளும் விறகுகளை மொத்தமாக வாங்கி குவிக்க தொடங்கியுள்ளனர்.

நகர பகுதிகளில் விறகுகளுக்கும் டிமாண்ட் இருப்பதால் நீண்ட நேரம் சமைக்க வேண்டிய பிரியாணி, பரோட்டா போன்ற உணவுகள் தவிர்க்கப்பட்டு, எளிய உணவுகள் மட்டுமே சமைப்பதற்கான முயற்சியில் ஓட்டல் நிர்வாகங்கள் ஈடுபட்டுள்ளன. இந்த தட்டுப்பாடு தொடர்ந்து நீடித்தால், சிறிய ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடும் அபாயம் ஏற்படும் என்றும், இது வேலைவாய்ப்பையும் பாதிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

நகர்ப்புறங்களில் விறகு அடுப்பை பயன்படுத்துவது சுற்றுச்சூழல் மற்றும் இடப்பற்றாக்குறை காரணமாக சிரமமாக இருந்தாலும், வேறு வழியின்றி ஓட்டல் உரிமையாளர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர். விறகு அடுப்பை பயன்படுத்தி சமைக்க இயலாத பல உணவகங்கள் சென்னையில் தற்காலிகமாக மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனால் ஓட்டல்களை அன்றாடம் உணவுக்காக நம்பி இருக்கும் லட்சக்கணக்கான மக்கள் பரிதவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:–

**மேற்காசியப் போர்ச்சூழல் காரணமாக, தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை எதிர்கொள்ள, இரண்டு நாட்களுக்கு முன்பு உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டதோடு, சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு பெட்ரோல் டீசல் உள்ளிட்ட எரிபொருள் விநியோகம் குறித்து மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், தொடர்புடைய ஒன்றிய அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.**

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. @r_ sakkarapani அவர்கள் தலைமையில், எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டமும் நேற்று நடைபெற்றுள்ளது.**

**இவ்விவகாரத்தில் ஒன்றிய அரசு மேலும் தீவிரமாகக் கவனம் செலுத்திட நாடாளுமன்ற வளாகத்திலும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.**

**போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்நேரத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் துணை நின்று மேற்காசியப் போர்ச்சூழலை எதிர்கொள்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

---

## சமையல் எரிவாயு தட்டுப்பாடு :

# மக்களவையில் விவாதிக்க அனுமதி மறுப்பு !

## எதிர்க்கட்சிகள் கண்டனம் – ஆர்ப்பாட்டம் !

**புதுடெல்லி, மார்ச் 14–**

**சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் மக்களவையில் நேற்று முன்தினமும் கடும் அமளி நிலவியது. இதனால் தொடங்கிய சில நிமிடங்களிலேயே அவை ஒத்திவைக்கப்பட்டது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் இதற்கு ஒன்றிய அரசு தொடர்ந்து அனுமதி மறுத்து வருகிறது. இந்நிலையில், சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இதுகுறித்து விவாதிக்க அனுமதி கோரியும் மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினமும் வலியுறுத்தினர். ஆனால் விவாதத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதற்கு கண்டனம் தெரிவித்து மக்களவையில் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், வி.சி.க., உள்ளிட்ட கட்சிகள் முழக்கமிட்டன. அப்போது, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, ஓட்டல்கள், வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளதால், மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும், இதனால், மக்களவையில் உடனடியாக விவாதம் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேச அனுமதிக்காமல் அவையை சபாநாயகர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார். பின்னர், அவை மீண்டும் கூடியபோதும், இதே கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டதால், மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

### நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்!

சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் நேற்று முன்தினமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அமெரிக்காவுடன் மோடி அரசு செய்து கொண்ட சமரசமும், டிரம்ப்பின் மிரட்டலுக்கு அடி பணிந்து, ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைத்ததும் தான் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம் என அவர்கள் குற்றம்சாட்டினர். சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.



# நாம் கல்வியை இறுகப் பற்றிக்கொண்டால், ஒருபோதும் வீழ மாட்டோம்!